பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 14 புதன்கிழமை 28.06.2023 கதிர் 229

### வடக்கு நீர் வளத்துக்குப் பொருத்தமற்ற

# நயினாமடு சீனி ஆலைக்கு தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பு

### அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அறிவிப்பு

அதிக நீர் தேவைப்படும் பயிரான கரும்பு வடக்கின் நீர்வளத்துக்குப் பொருத்தமற்ற பயிர். அதனைச் செய்கை பண்ணடுவதன் ஊடாக வடக்கு பாலைவனமாக மாறக்கூடும். எனவே வடக்கின் நீர் வளத்துக்குப் பொருத்தமற்ற அபிவிருத்தித் திட்டமான நயினாமடு சீனித் தொழிற்சாலையை தமிழ் அரசுக் கட்சி எதிர்க்கும். வவுனியா மக்களினதும் வடக்கு மக்களினதும் முழுமையான சம்மதம் இல்லாத எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

வவுனியா நயினாமடுவில் சீனித் தொழிற்சாலைக்கு 72 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வழங்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்திருப்பது குறித்து காலைக்கதிர் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

வெளிநாட்டுவாழ் நண்பர் ஒருவர் நேற்று அழைப்பெடுத்தார். ஈழத் தமிழ் அரசியல் தொடர்பில் தொடர்ந்து கண்காணித்து வருபவர் அவர். மட்டுமல்ல, தான் வாழும் நாட்டில் ஈழத் தமிழர் சார் அரசியல் செயற்பாடுகளில் முன்னிற்பவரும் கூட. நீண்ட நாட்களுக்குப் பின்னர் அழைப்பெடுத்தார்.

எடுத்த எடுப்பிலேயே "உங்கள் செய்தியை உண்மையாக்கிவிட்டீர்கள் போல" என்றார்.

எனக்குத் தலையும் புரியவில்லை காலும் புரியவில்லை. செய்தியை உண்மையாக்குவதா என்ற சந்தேகத்தில் "எதைச் சொல்கிறீர்கள்" என்று பொதுவாகக் கேட்டு வைத்தேன்.

"சீனித் தொழிற்சாலை விசயம்தான். நீங்கள்தானே அது தொடர்பில் முதன் முதலில் செய்தி போட்டதுடன் தொடர்ந்தும் எழுதி வருகிறீர்கள். உங்களைவிட ஒரு இணையத்தளம் மட்டும்தானே அந்தச் செய்தியை ஒரு தடவை போட்டது. வேறு ஒரு ஊடகமும் அது பற்றி செய்தி வெளியிடவில்லையே" என்றார்.

"அவர்களுக்குத் தகவல் கிடைத்திருக்காது. அல்லது ரணில் போன்ற பெரிய

☞ 2

## இரண்டு சட்டங்களில் சபாநாயகர் ஒப்பமிட்டார்

நாடாளுமன்றத்தில் அண்மையில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலக சட்டமூலத்தில் சபா நாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்றையதினம் கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

பொது நிதியைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்துக்கு சுயாதீனமான, பாரபட்சமற்ற பொருளாதார மற்றும் நிதிப் பகுப்பாய்வு, வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய பார்வையுடன் பொது நிதிப் பொறுப்புகளை நிறைவேற்ற உதவும் நோக்கத்துடனும்

☞ 2

### சீனித் தொழிற்சாலைக்கு ஆதரவளிப்பது

# தாயையும் தாரத்தையும் விற்றுப்பிழைக்கும் அநீதி

### மாகாண முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன் பாய்ச்சல்

வடக்கில் சீனித் தொழிற்சாலையைத் தொடங்கி அதன் மூலம் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையை வலிந்து வடக்குக்குள் கொண்டுவந்து எமது நிலத்தையும் இழக்கும் திட்டத்துக்கு எமது அரசியல்வாதிகள் சிலரே உடந்தையாக இருப்பது தாயையும் தாரத்தையும் விற்றுப் பிழைப்பதற்கு ஒப்பானது.

இவ்வாறு கடும்காட்டமாக விமர்சித்தார் வடக்கு மாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன். மண்ணையும் மக்களையும் நேசிக்கும் எவரும் இந்தத் திட்டத்தை எதிர்க்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வவுனியா நயினாமடுவில் அமைக்கப்படவுள்ள சீனித் தொழிற்சாலைக்கு 72 ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஒதுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருப்பது தொடர்பில் காலைக்கதிர் பத்திரிகைக்குக் கருத்துத்

☞ 2

## அமைச்சரவை அனுமதி

உலக வங்கியுடன் 500 மில்லியன் டொலர் கடனுதவிக்கான ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2023 - 2024 ஆம் ஆண்டுவரையிலான இரண்டு வருட காலப்பகுதிக்கான அபிவிருத்தி கொள்கை நிதி வழங்கல் திட்டத்தின்கீழ் உலக வங்கியின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றதாக

☞ 2

## நாடாளுமன்ற விசேட அமர்வு சனிக்கிழமையில் கூடுகின்றது

நாடாளுமன்றத்தின் விசேட அமர்வை எதிர்வரும் சனிக்கிழமை கூட்டுவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பிரதமரின் வேண்டுகோளுக்கு இணங்க பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 16 ஆம் நிலையியற் கட்டளைக்கு அமைய சபாநாயகர் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றத்தை கூட்டவுள்ளார்.

முன்னதாக உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு ஒப்புதல் பெறுவதற்காக சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நாடாளுமன்றம் கூட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சமூகச் செயற்பாட்டாளர் நிகேஷல கைதாகிப் பிணையில் விடுவிப்பு

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்ட சமூக செயற்பாட்டாளர் பியத் நிகேஷல நேற்றையதினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வாக்குமூலம் பெறுவதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு திங்கட்கிழமை அழைக்கப்பட்டிருந்த அவர் பின்னர் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த வருடம் ஜூலை 9 அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்திற்கு தீ வைத்தமை மற்றும் சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராகப் பதவி வகித்தபோது போராட்டக்காரர்கள் அவரது சொந்த வீட்டுக்கு தீ வைத்த சம்பவத்தை சமூக ஊடகங்கள் ஊடாக நேரடி ஒளிபரப்புச் செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் குற்றவியல் விசாரணை திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட சமூக ஊடக செயற்பாட்டாளர் பியத் நிகேஷல, நீதிமன்றத்தில் முன்னி

☞ 2

## கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் அலி சப்ரி சீன அமைச்சருடன் பேச்சு

சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சீனாவின் எக்சிம் வங்கியின் தலைவர் வூ புளின்-ஐ சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடியதாகவும், இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்கு சீனா தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என்று இதன்போது சீனாவின் எக்சிம் வங்கியின் தலைவர் கூறியதாகவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

சைனா ஹார்பர் பொறியியல் ஒத்துழைப்பு நிறுவனத்தின் தலைவர் மற்றும் அந்த நிறுவனத்தின் உயர்மட்ட முகாமைத்துவ அதிகாரிகளையும் அமைச்சர் சந்தித்துள்ளார்.

துறைமுக நகரத்தில் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்கள் பலவற்றுக்கு புதிய முதலீடுகளை மேற்கொள்ள மேலும் 1.2 பில்லியன் டொலரை வழங்க அவர்கள் இணக்கம் தெரிவித்ததாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சீனாவின் சினோபெக் நிறுவனத்தின் தலைவரையும் அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சினோபெக் நிறுவனத்திற்கும் இலங்கைக்கும் இடை

☞ 2

## சனத் நிஷாந்தவுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

### அடுத்த மாதம் விசாரணைக்கு

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிரான வழக்கை ஜூலை 13 விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

சனத் நிஷாந்த பொதுஜன பெரமுன கட்சித் தலைமைகத்தில் கடந்த ஓகஸ்ட் 23 அன்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் நீதிமன்றத்தையும் நீதிபதிகளையும் அவமதிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நீதிவான் மற்றும் மாவட்ட நீதிபதிகளைக் கொண்ட நீதிச்சேவை சங்கம் மற்றும் சட்டத்தரணிகள் அடங்கிய தரப்பினர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தனர்.

அதில் இந்தக் கருத்துக்கள் நீதித்துறைக்கும், நீதித்துறை உத்தியோகத்தர்களுக்கும் அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் மனுதாரர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# ஊழியர் சேமலாப நிதி, வங்கி வைப்பாளர்களுக்கு பாதிப்பின்றியே உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு

### உறுதிமொழி வழங்குகின்றார் ஜனாதிபதி ரணில்
### முன்மொழிவுகள் இன்று அமைச்சரவையில்

உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் உட்பட எந்தவொரு பொது நிதியின் அங்கத்துவ மிகுதிக்கும் பாதிப்பு ஏற்படாது எனவும், கடந்த காலங்களில் செலுத்தப்பட்ட உயர் ஓய்வூதிய நிதிய விகிதத்தையும் அது எவ்விதத்திலும் பாதிக்காது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மேலும், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பானது நாட்டின் வங்கிக் கட்டமைப்பு அல்லது எந்தவொரு அரச அல்லது தனியார் வங்கியின் நிலைத்தன்மையையும் பாதிக்காது என்றும் அவர் உறுதிமொழி வழங்கினார்.

நாட்டில் உள்ள 50 மில்லியனுக்கும் அதிகமான வங்கி வைப்பாளர்களின் வைப்புத்தொகைக்கு எதுவித பாதிப்பும் எழாது என்றும், தற்போது வங்கி வைப்புத் தொகைக்கு செலுத்தப்படும் வட்டியையும் அது பாதிக்காது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக்கடன்களை மறுசீரமைப்பதற்கான முன்மொழிவுகள் (இன்று) விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டச் செயலாளரின் நிர்வாகக் கட்டடத் தொகுதியான "லக்சியனே மாளிகையை" நேற்று மக்கள் பணிக்குக் கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2022ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கையின் மொத்த அரச கடன் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) 83,700 மில்லியன் டொலர்களாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128.3 சதவீதம்.

2022ஆம் ஆண்டின் இறுதியில், மொத்த வெளிநாட்டுக் கடன் தொகை 41,500 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 63.6 சதவீதமாகும். இப்போது மொத்த உள்நாட்டுக்கடன் தொகை 42,100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 64.6 சதவீதமாகும்.

நாட்டின் கடனை மறுசீரமைக்காமல் பேணினால், 2035ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100 சதவீதத்திற்கும் அதிகமாக அரச கடன் இருக்கும். வெளிநாட்டு கடன் வழங்குநர்கள் நாட்டின் கடனை மறுசீரமைக்க ஏற்கனவே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் கடன் நிலைத்தன்மையை உருவாக்குவதற்கு, கடன் மறுசீரமைப்பு அவசியமானது மற்றும் உள்நாட்டு கடனும் மறுசீரமைக்கப்படவேண்டும். எதிர்வரும் 5 வருடங்களில் மாத்திரம் 17 பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு கடன்வழங்குநர்களிடமிருந்து பெறப்படும். அதற்கிணங்க எமது உள்நாட்டுக்கடன்

☞ 2

### அஸ்வெசும உதவித் திட்டம் தொடர்பான

## மேன்முறையீடுகளை ஆராய சிறப்புக் குழுவினர் நியமிப்பு

அஸ்வெசும தொடர்பில் கிடைக்கும் மேன்முறையீடுகள், ஆட்சேபனைகளை ஆராய்வதற்காக விசேட குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்ததாவது:

பிரதேச செயலக மட்டத்தில் துரித விடயம் சம்பந்தமாக கையாள்வதற்குக் குழுவை நியமிக்க நடவடிக்

☞ 2

## அவசர கூட்டத்துக்கு சுமந்திரன் ஏற்பாடு

(ந.லோகதயாளன்)

ஜனாதிபதி மேற்கொள்ளவுள்ள உள்ளூர் கடன் சீரமைப்பு தொடர்பில் பல தரப்பட்டவர்களும் பங்கேற்கும் அவசர கலந்துரையாடல் ஒன்றிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஏற்பாடு செய்துள்ளார்.

கொழும்பின் ஜெற்வின் விடுதியில் இன்று மாலை 7 மணிக்கு இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட சமயம் மேற்கொண்ட கூட்டத்தை ஒத்த கூட்டமாக உள்ள போதும் இன்று

☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

இடங்களை ஏன் பகைத்துக் கொள்வான் என்று போடாமல் விட்டிருப்பார்கள்" என்றேன்.

அவர் பெரிதாகச் சிரித்துக்கொண்டே "அதுக்காக உங்களுக்குக் கிடைத்த பட்டம் என்ன என்று தெரியுமோ?" என்றார். நானும் பெருந்தன்மையாக "யாராவது ஏதாவது சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள். அதையெல்லாம் கணக்கெடுத்தால் யார் வேலையைப் பார்ப்பது" என்றேன்.

"இல்லை. நான் அதைச் சொல்லவில்லை. பத்திரிகை என்றால் விமர்சிப்பார்கள் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால், இது அப்படிப்பட்ட விமர்சனம் அல்ல. இந்தச் செய்தியைப் போட்டதற்காக உங்களை மஞ்சள் பத்திரிகை என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் புனைகதைகளை எழுதுகிறீர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் கேட்டனான். இப்ப உங்களுடைய செய்தி முழு உண்மை என்று வெட்ட வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. இப்ப முகத்தைக் கொண்டுபோய் எங்கே வைத்துக்கொள்வார்கள்?" என்றார்.

அவரது கதையைக் கேட்டு பெரிதாகச் சிரித்துவிட்டு, "அது அவர்களின் கையாலாகாத்தனம்" என்று கூறி அழைப்பைத் துண்டித்துக்கொண்டேன்.

அவர் யாரைச் சொல்ல வந்தார் என்று எனக்குத் தெரியும். அது பற்றி ஏற்கனவே இந்தப் பத்தியில் வாசகர்களுக்குச் சாடைமாடையாக முன்னரே தெரிவித்தும் இருக்கின்றேன்.

நாங்கள் நயினாமடு சீனித் தொழிற்சாலைக்கு காணி ஒதுக்கும்படி அரச அதிகாரிகளின் சூம் கூட்டத்தில் ஜனாதிபதி உத்தரவிட்டார் என்று செய்தி வெளியிட்டிருந்தோம். அந்தக்கூட்டத்தில் ரெலோவின் பேச்சாளர் சுரேன் குருசாமியும் கலந்து கொண்டிருந்தார் என்பதையும் வெளிப்படுத்தியிருந்தோம். அது குறித்து வவுனியாவில் உள்ள அவர்களது அணியைச் சேர்ந்த மற்றொரு அரசியல்வாதி அழைப்பெடுத்து என்ன ஏது என்று விசாரித்திருக்கிறார். அதற்கு "காலைக்கதிர் ஒரு மஞ்சள் பத்திரிகை. அது செய்தி போட்டது என்று நம்பி என்னட்டக் கேக்கிறீங்களே" என்று அவருக்குப் பதில் கிடைத்திருக்கிறது.

அதைத்தான் நண்பர் இப்போது சுட்டிக்காட்டுகின்றார். நண்பர் தூண்டிவிட்டதை அடுத்து எனக்குள் எழுந்த ஒரேஒரு கேள்வி என்னவென்றால், உண்மையை - நடந்தது நடந்தபடி - அப்படியே எழுதியதற்கே எம்மை 'மஞ்சள் பத்திரிகை' என்றவர்கள், அது குறித்த அமைச்சரவைப் பத்திரத்தை நகர்த்தியவரை என்ன சொல்லியிருப்பார்கள்? "நீலப் பட நடிகர்" என்று விளித்திருப்பார்களோ? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே!

**இடியின்னல்**
(idiminnal23@gmial.com)

## நயினாமடு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனித் தொழிற்சாலைக்கான நில விநியோகம் தொடர்பிலே ஜனாதிபதியை சில தமிழ் தரப்புக்கள் தனியாகச் சந்தித் தன எனவும் இந்தச் சீனி உற்பத்தித் தொழிற்சாலைப் பிரதிநிதிகள், தேசிய முதலீட்டுச் சபையின் பிரதிநிதிகள் மற்றும் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமே 18 மேற்கொண்ட சூம் மூலம் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் ரெலோவின் பேச்சாளர் கலந்துகொண்டார் என்றும் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியபோதும் அந்தக் கட்சியின் தலைவர்கள் உள்ளூரில் வாயைத் திறக்க வேயில்லை.

இந்தத் தொழிற்சாலைக்கு நிலம் வழங்கும் தீர்மானம் மேற்கொண்ட அதே அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாகூட இவ்வளவு பெரிய நிலம் ஒரு தொழிற்சாலைக்காக ஒதுக்கப்படுவது குறித்து வாய் திறக்கவில்லை.

மக்கள் நிலங்களாக இருந்து பின்னர் வனப்பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளை விடுவிக்க நடவடிக்கை இடம்பெறுவதைத் தனது சாதனையாக முகநூலில் பதிவேற்றிய அமைச்சர், இந்தச் சீனித் தொழிற்சாலைக்கான நிலங்கள் தொடர்பில் வாய் திறக்கவில்லை.

வனங்களாக அறிவிக்கப்பட்ட மக்கள் நிலங்களை விடுவிப்பதற்கு நீண்ட காலமாகவே குரல் எழுப்பி பல முயற்சிகளை மேற்கொண்டு வரும் எமது சக நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், இ.சாள்ஸ் நிர்மலநாதன் போன்றோர் இந்த விடயத்தை ஜனாதிபதிவரை கொண்டு சென்று, அவருடனான பேச்சுக்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி அதனை வெற்றிகரமாக நகர்த்தியதை இருட்டடிப்புச் செய்து, ஏதோ தனது முயற்சியால்தான் இந்த விடயம் வெற்றிபெற்றதாகக் காட்ட முற்பட்ட அமைச்சர், சீனித் தொழிற்சாலைக்கு நிலம் வழங்குவது தொடர்பில் வாயே திறக்காமல் இருப்பதன் மூலம் அதற்கு ஆதரவளிக்கிறார் என்றே கருதவேண்டியுள்ளது.

எது எப்படியிருந்தாலும் தமிழ் அரசுக் கட்சி இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. எமது பகுதிக்குப் பொருத்தமில்லாத இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கு நாம் பகிரங்கமாகவே எமது கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம். ஏனெனில் 30 ஆயிரம் ஹெக்டேயர் அல்லது 72 ஆயிரம் ஏக்கர் நிலத்தை நீர்வளம் இல்லாத வடக்கில் நீரைதிகம் உறிஞ்சும் கரும்புச் செய்கைக்கு வழங்குவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. இதனால் அந்த மாவட்டமே பாலைவனமாக மாறும் அபாயமும் உள்ளது.

இந்த நிலத்தை வழங்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நேரடியாக ஈடுபட்டிருக்கிறார் என்பதை அறிய முடிகின்றது. ஆனால் அது பற்றி அவர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை. கடந்த சில மாதங்களில் எம்மைப் பல தடவைகள் ஜனாதிபதி சந்தித்தபோதும் இது தொடர்பில் எந்தத் தகவலும் தெரிவிக்காதமை இந்தத் திட்டத்தின் உண்மையான உள்நோக்கம் குறித்து எமக்கு மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இவற்றின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை நாம் முற்றாக எதிர்ப்போம் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

## சமூகச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைப்படுத்தப்பட்டார். அவரை 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுதலை செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் வெளிநாடு செல்ல தடைவிதித்துள்ள நீதிவான், அவரது வசிப்பிட சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு மற்றுமொரு பிணை நிபந்தனையையும் விதித்தார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டி 5 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சொந்த வீடு, போராட்டம் நடைபெற்ற கடந்த ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி தீவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அவசர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதியம் அமைச்சரவையில் தீர்மானித்த சனிக்கிழமை நாடாளுமன்றில் முன்மொழியப்படலாம் என எதிர்பார்க்கப்படும் உள்ளூர் கடன் சீரமைப்பில் . ஊழியர் சேமலாப நிதி, ஓய்வூதியம், தனியார் வைப்புக்கள் பாதிக்கப்படாமல் இருப்பது உறுதிப்படுத்தப்படவேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை வைக்கும் வகையிலேயே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய இக் கூட்டத்தில் நிதிஆலோசகர்கள், பொருளாதார நிபுணர்கள், கட்சித் தலைவர்களுடன் ஜனாதிபதியும் அழைக்கப்பட்டுள்ளார்

## ஊழியர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குநர்களும் இதற்கு பங்களிக்க வேண்டும்.

பொதுமக்களின் வங்கி வைப்புகளை பாதுகாக்கும் முதன்மை நோக்கத்துடன் இந்தப் பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனைத்து வங்கிகளின் வங்கி வைப்பாளர்களையும் பாதுகாப்பது பெரும் பொறுப்பாகும்.

அதற்கமைய, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு முறையின்படி வங்கி வைப்பாளர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. வங்கி முறைமை வீழ்ச்சியடையாது. இது பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பக்கூடிய மறுசீரமைப்பிற்கு வழிவகுக்கும்.

நாட்டின் பொருளாதார மீட்சி, வட்டி விகிதக் குறைப்பு, ஆட்சியாளர்களால் இலகுவாக மானியங்கள் வழங்க முடிந்தமை சாதகமான அம்சங்கள். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள கடன் சுமை அடுத்த 10 வருடங்களில் குறைந்து அதன் மூலம் கிடைக்கும் பலன்களை நாட்டு மக்களுக்கு வழங்க முடியும்.

பிரான்ஸுக்கான கடைசி உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, பொதுநலவாய பொதுச்செயலாளர் பெட்ரிசியா ஸ்கொட்லாந்து, சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குனர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, நெதர்லாந்து பிரதிப் பிரதமர் (முதல்) மற்றும் நிதி அமைச்சர் சிக்ரிட் காக், அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ஜெனட் யெலன் மற்றும் ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி ஆகியோருடன் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மற்றும் இலங்கையின் நிதித்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை மாற்றியமைக்க முடிந்ததையிட்டு அனைவரும் மகிழ்ச்சியடைகின்றனர். எதிர்காலத்தில் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு கூடுதல் பங்களிப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அண்மையில் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடனான தொலைபேசி உரையாடலின் போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு சாதகமான பங்களிப்பை வழங்க அவர் உறுதியளித்தார். இந்த விடயம் தொடர்பில் இந்தியாவுடன் நீண்ட கலந்துரையாடல் மேற்கொள்ள உள்ளேன்.

தற்போது சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, அந்நாட்டு வெளி விவகார அமைச்சர் கிவின் காண்ட் உடன் நடத்திய கலந்துரையாடலின் போது, இருதரப்பு மற்றும் பொருளாதார தொடர்புகளை பலப்படுத்துவதுவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

சீன நிதியமைச்சர் லீ கியூன் உடனான கலந்துரையாடலின் போது, நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான முன்னேற்றத்திற்கான திட்டம் குறித்து ஆராயப்பட்டது. நெருக்கடி நிலையில் சீனா வழங்கிய ஒத்துழைப்பிற்கு அமைச்சர் அலி சப்ரி நன்றி தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவினால் நியமிக்கப்பட்டுள்ள சைனா எக்சிம் வங்கியின் தலைவர் வூ புலின் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது. கடன் மறுசீரமைப்பிற்கு உச்சபங்களிப்பு அளிப்பதாக அவர்கள் அறிவித்துள்ளனர் - என்றார்.

## மேன்முறையீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கை எடுக்கப்படவுள்ளது. இந்தக் குழுவின் ஊடாகத் தகுதியானவர்களை தெரிவு செய்வதற்கான முறைமையை தயாரிக்கப்படவுள்ளது.

அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்களுக்கு, அதனை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

அஸ்வெசும தொடர்பில் மேன்முறையீடுகள், ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கு ஜூலை 10 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, 'அஸ்வெசும' சமூகநலன்புரித் திட்டத்தின் பயனாளர்கள் தொடர்பான ஆட்சேபனைகளையும் எதிர்ப்புகளையும் முன்வைப்பதற்காக இன்று முதல் அனைத்து பிரதேச செயலகங்களிலும் விசேட கருமபீடத்தை திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# அமைச்சுப் பதவி எமக்கு வேண்டாம்

## நாமல் மீண்டும் தெரிவிப்பு

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நாம் அமைச்சுப் பதவிகளைக் கேட்கவில்லை. அந்த அமைச்சுக்களை ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களுக்கு வழங்கி அரசைப் பலப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றோம்.'

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

'எமக்கு அமைச்சுக்கள் வேண்டாம் என்று நாம் எப்போதோ கூறிவிட்டோம். மொட்டுக் கட்சியினர் அமைச்சரவையில் இருப்பதால்தான் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து யாரும் வருவதில்லை என்று கூறுகின்றார்கள். எமது அமைச்சுப் பதவிகளை அவர்களுக்குக் கொடுத்து அரசைப் பலப்படுத்துங்கள் என்று நாம் அப்போதே சொல்லிவிட்டோம். நாங்கள் அதற்கு ஆதரவு வழங்குகின்றோம் என்றும் கூறிவிட்டோம். ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 10 பேர் வருகின்றார்கள். 20 பேர் வருகின்றார்கள். 40 பேர் வருகின்றார்கள் என்று ஒரு வருடமாகச் சொல்கிறார்கள் சொல்கின்றார்கள். ஆனால், எதுவும் நடக்கவில்லை.' - என்றார்.

## இரண்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கு உதவுவதை நோக்காகக் கொண்டும் நாடாளுமன்ற வரவு செலவு திட்ட அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது.

அத்துடன் அண்மையில் நிறைவேற்றப்பட்ட குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்ட மூலத்திலும் சபாநாயகர் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

இதற்கமைய இந்த இரண்டு சட்டமூலங்களும் 2023 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நாடாளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலக சட்டம், 2023 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமாக அமுல்படுத்தப்படும்.

## தாயையும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று உலகில் சகல அபிவிருத்தியும் நீர்ச்சுவடை வைத்தே திட்டமிடப்படுகின்றது. இங்கே ஒரு கிலோ கிராம் கரும்பை உற்பத்திசெய்ய 210 லீற்றர் நீரும் ஒரு கிலோ சீனியை உற்பத்தி செய்ய ஆயிரத்து 780 லீற்றர் நீரும் தேவை என கணக்கிடப்படுகின்றது. இதுவே கரும்புச் செய்கைக்கான நீர்ச் சுவடையின் குறிகாட்டியாகும்.

இன்று வளர்முக நாடுகள் தமது மண்ணைப் பாதுகாக்கும் நோக்கில் பிற நாட்டில் வேலை வாய்ப்பு என்னும் போர்வையில் இந்த வகையான தொழிற்சாலைகளை நகர்த்துகின்றன. இதுபோன்ற கரும்பு உற்பத்திகள்

உணவுத் தானிய உற்பத்தியை பாதிக்கும் என்பதனை அவர்கள் உணர்ந்துள்ளமை மட்டுமன்றி, அனுபவத்திலும் கண்டுள்ளனர்.

வடக்கில் கரும்பு பயிரிடப்படுவதாக இருந்தால் இங்குள்ள சிறு குளங்களை நம்பியே அதைச் செய்ய வேண்டியிருக்கும். அது ஏனைய விவசாயங்களுக்கு நீர் அற்ற நிலையை ஏற்படுத்தும்.

சீனியின் பயன்பாட்டை குறையுங்கள் என விளம்பரம் செய்துகொண்டு பெரும் சீனித் தொழிற்சாலையினையே வடக்கில் அமைக்க முனைகின்றனர்.

இத்தொழிற்சாலையை ஆரம்பித்துவிட்டு நீர் இல்லை என மகாவலியை இங்கு திருப்புவார்கள். அதன் மூலம் நிலத்தையும் பறிகொடுக்க எமது சில அரசியல்வாதிகளே துணைபோகின்றமை தமது தாயையும் தாரத்தையும் விற்றுப் பிளைப்பதற்கு ஒப்பானது.

மண்ணையும் மக்களையும் நேசிக்கும் எவரும் இத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவேகூடாது. நாம் வெறுமனே அபிவிருத்தியை எதிர்ப்பவர்கள் அல்ல. மாறாக தமது வயிற்றுப் பிளைப்பிற்காக எமது மக்களையும் மண்ணையும் விற்றுப் பிழைக்க முனையும் போலித் தேசியவாதிகளை இனம்காட்ட வேண்டும் - என்று ஜங்கரநேசன் மேலும் தெரிவித்தார்.

## கடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலான முதலீடு மற்றும் பங்களிப்பு தொடர்பில் இதன்போது கலந்துரையாடியதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

## அமைச்சரவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைய, 2023 ஆம் ஆண்டிற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இணையான விசேட கணக்குரிமை எனப்படும் ஞுனுசு 371.2 மில்லியன் நிதியை இரு தவணைகளில் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பான இணக்கப்பாட்டை எட்டுவதற்காக நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22



காலைக்கதிர் Kalaikkathir

# மக்களின் அடிப்படை உரிமையை பொலிஸார் பாதுகாக்க வேண்டும்

## மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனை இணைப்பாளர் கோரிக்கை




எமது நாட்டில் நாளுக்கு நாள் ஏறிக் கொண்டு செல்லும் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் குடும்பத்தில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

குடும்பச் சுமைகளைச் சுமக்கின்ற தாய்மார்கள் வேலைக்குச் செல்லும் போது ஏற்படும் விபரீதங்கள் பற்றியும் சமூகத்தில் உள்ளவர்களின் வறுமை கல்வியறிவின்மை போன்ற காரணங்களினாலும் நாளுக்கு நாள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் புலனாய்வுகளின் போது சந்தேகநபர்களை சித்திரவதைக்குள்ளாகாமலும் இழிவான நடத்துகைக்குள்ளாக்காமலும் பொலிஸார் அடிப்படை உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச சித்திரவதைக்கு எதிரான தினத்தையொட்டி கல்முனை பிராந்தியத்திலுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கான செயலமர்வு கல்முனை பொலிஸ் தலைமை நிலையத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய நிலையத்திற் குட்பட்ட ஐந்து பொலிஸ் நிலையங்களிலுள்ள உயர் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேலும் இணைப்பாளர் அஸீஸ் தெரிவிக்கும் போது -

1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கு எதிரான சமவாய சட்டம் ஒன்றை இலங்கை அரசு உள்வாங்கி அதனை 20.12.1994 இல் அத்தாட்சிப்படுத்தியது.

சிறுவர் பாலியல் தொந்தரவுகள் பாலியல் பலாத்காரங்கள் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டாலும் அவைகள் சில நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்படாமல் சமாதானப்படுத்தப்பட்டு வருகின்றமை கவலைக்குரியது.

இதனால் தப்புச் செய்கின்றவர்கள் இலகுவில் தப்பித்துக் கொள்கின்றனர். இதற்குச் சாட்சிகள் முன்வராமை சமூகத்தின் ஏளனமான பார்வை ஆதாரங்கள் அழிக்கப்படல் என்பவை வழக்கொன்றைத் தொடர்வதற்கு பலமற்ற விடயங்களாக இருக்கின்றன. எம்மில் அனேகமானவர்களுக்கு பாலியல் தொந்தரவு இலங்கைச் சட்டத்தில் குற்றம் என எழுதப்பட்டுள்ள விடயம் என்னவென்பது தெரியாது என்றே கூற வேண்டும்.

இது பற்றி 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை சட்டத்தின்படி இக்குற்றம் பற்றி வரையறை செய்யப்பட்டுள்ளது. சித்திரவதைகளைக் கட்டுப்படுத்த பாரிய பங்களிப்பைச் செய்கின்ற இடம்தான் நீதிவான் நீதிமன்றம். இங்குதான் ஆரம்ப கட்டத்தில் அதிகமானோர் வருகின்றனர். அதில் சிறு தொகையினரே உயர் நீதிமன்றம் செல்கின்றனர்.

இலங்கை அரசமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தில் பதினோராம் உறுப்புரையில் உடல் ரீதியாகவோ உள ரீதியாகவோ ஒரு மனிதனைச் சித்திரவதை செய்வது அடிப்படை உரிமை மீறல் எனவும் ஒருவரைத் தொல்லைக்கு உட்படுத்துவது துன்புறுத்தும் செயலாகச் சட்டம் கருதுகிறது. ஒரு பிள்ளையைச் சொற்களின் மூலமாக அல்லது வேறொரு விதத்தில் பாலியல் இம்சைக்குள்ளாக்குதல் குற்றம் என்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளது.

இந்நிகழ்வில் சித்திரவதை பற்றிய மருத்துவ ரீதியான கருத்துக்களை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி முஹம்மட் றிபாஸ் நிகழ்த்தினார். (05)

## வெளிநாடுகளில் தொழில் பெற்றுத்தருவதாக ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பணம் மோசடி

### 3 பேர் கைது

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுத்தருவதாகதெரிவித்து 109 லட்சம் ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்த முகவர் நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் அவருக்கு உதவி வழங்கிய பெண்ஒருவர் உட்பட மூன்று பேர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணை பிரிவின் அதிகாரிகளால் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களுக்கு எதிராக பணியகத்துக்கு 50 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களை பல்வேறு நாடுகளில் தொழில் பெற்றுத் தருவதாக தெரிவித்து அவர்கள் 109 லட்சம் ரூபாவுக்கும் அதிக பணம் மோசடி செய்திருப்பதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

அதன் பிரகாரம் பணியகத்தின் விசாரணை அதிகாரிகள் இந்த விசாரணையை மேற்கொண்டதுடன் அதன் பெறுபேறாக குருணாகலை பரகஹதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிரதான சந்தேகநபர்கள் மற்றும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்கள்.

குறித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் இதற்கு முன்னர் பணியகத்தின் அனுமதி பத்திரத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக நபர்களை இணைத்துக் கொண்டுள்ளதுடன் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை பெற்றுத் தருவதாக தெரிவித்து இதற்கு முன்னரும் பணம் மோசடி செய்த காரணத்தால் குறித்த முகவர் நிறுவனத்தின் அனுமதிப்பத்திரம் பணியகத்தால் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான பின்னணியிலேயே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக தெரிவித்து சட்டத்துக்கு முரணான வகையில் தொடர்ந்தும் இந்த மோசடி நடவடிக்கையை செய்து வந்திருப்பது தகவல் வெளிப்பட்டிருக்கிறது.

பணியகத்தின் அனுமதி மத்திரம் இல்லாமல் சட்டவிரோதமான முறையில் ஆள்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக இணைத்துக்கொள்ளல் மற்றும் பணம் மோசடி செய்தல் போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் குருணாகலை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, அவர்களை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் எனப் பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## கெஸ்பேவ நீதிமன்றின் தடுப்புக் கூண்டிலிருந்தவருக்கு ஹெரோயின், ஐஸ் வழங்க முற்பட்டவர் மடக்கிப் பிடிப்பு

கெஸ்பேவ நீதிவான் நீதிமன்ற தடுப்புக் கூண்டில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவருக்குபோதைப்பொருள் அடங்கிய பார்சல் ஒன்றை வழங்க முயற்சித்த ஒருவர் தப்பிச் செல்ல முற்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டார் என கெஸ்பேவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரால் வழங்கப்படவிருந்த சிறிய பார்சலை பொலிஸார் கைப்பற்றி சோதனையிட்ட போது, அதில் 10 கிராம் ஹெரோயின், ஒரு பக்கெற் ஐஸ்போதைப்பொருள் மற்றும் புகையிலை இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கெஸ்பேவ நீதிமன்றத்தின் பதில் நீதிவான் மதிய உணவு இடைவேளைக்கு நடவடிக்கைகளை ஒத்தி வைத்த நிலையில், கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நீதிமன்ற தடுப்புக்கூண்டின் முன்னால் உள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்தபோதே சந்தேக நபர் தடுப்புக் கூண்டிலிருந்தவருக்கு பொதி ஒன்றைக் கொடுக்க முயற்சித்துள்ளார்.

இதன்போது சந்தேக நபரைக்கைதுசெய்ய குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் சென்றபோது அவர் தப்பிச் செல்ல முற்பட்டபோது மடக்கி பிடிக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களுத்துறை வஸ்கடுவ பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடையவராவார். (05)

## ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே பொருளாதாரத்தை கட்டியெழுப்பமுடியும்

### ருவன் விஜேவர்த்தன தெரிவிப்பு



இலங்கை வங்குரோத்து அடைந்த நாடு. அதனால் வங்குரோத்து அடைந்த நாட்டின் பொருளாதாரத்தை ஓரிரு வருடங்களில் கட்டியெழுப்ப முடியாது.

என்றாலும் தற்போதுள்ள நிலைமையில் ரணில் விக்ரமசிங்கவால் மாத்திரமே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி எடுத்து வரும் நடவடிக்கை தொடர்பாக கருத்துதெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

கடந்த அரசாங்கத்தின் பிழையான தீர்மானங்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்திருந்தது.

இதன் பாதிப்பை மக்கள் கடந்த ஒரு வருடங்களுக்கு முன்னர் அனுபவித்திருந்தனர். எரிபொருள், எரிவாயு பெற்றுக்கொள்வதற்கான வரிசை, அத்தியாவசிய பொருள்களுக்கான தட்டுப்பாடு என மக்கள் பாரிய சிரமத்தை எதிர்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்ல நாட்டின் ஆட்சி பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

என்றாலும் யாரும் முன்வராத நிலையிலேயே ரணில் விக்ரமசிங்க முன்வந்தார். வங்குரோத்து அடைந்த நாட்டையே ரணில் விக்ரமசிங்க பொறுப்பெடுத்தார். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட முன்வருமாறு ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் இருக்கும் அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்திருந்தார். ஆனால் எதிர்கட்சிகளிடமிருந்து பலமான ஆதரவு கிடைக்கவில்லை.

இருந்தபோதும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கையில் நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கப்போவதில்லை என்றே எதிர்க்கட்சிகள் தெரிவித்து வந்தன. என்றாலும் ரணில் விக்ரமசிங்க தனது அரசியல் அனுபவம் திறமையை பயன்படுத்தி சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தார்.

இதன் மூலம் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டு, நாட்டின் பொருளாதாரத்தை படிப்படியாக கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்து வருகிறார்.

என்றாலும் இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை ஓரிரு வருடங்களில் கட்டியெழுப்ப முடியாது.

அதனால்தான் ஜனாதிபதி சர்வதேச நாடுகளுக்குசென்று, எமது நாட்டுக்கு தேவையான வளங்களை கொண்டுவர அந்த தலைவர்களுடன் கலந்துரையாடி வருகிறார்.

அதனால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ரணில் விக்ரமசிங்கவை தவிர வேறு யாருக்கும் முடியாது.

பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களை மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தியினர் விமர்சித்து வருகின்றனர்.

ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எந்த தீர்வையும் அவர்கள் முன்வைப்பதும் இல்லை. அவர்களின் திட்டத்தை தெரிவிப்பதும் இல்லை. - என்றார். (05)

# இரத்தினபுரி - கொழும்பு வீதியில் விபத்து; 20 பேர் காயம் ; 5 பேர் கவலைக்கிடம்





இரத்தினபுரி - கொழும்பு பிரதான வீதியில் புஸ்ஸல்ல ஆசிரியப்பயிற்சிநிலையத்துக்கு அருகில் தனியார் பஸ் வழுக்கிச் சென்று சொகுசு பஸ்ஸுடன் மோதியதில் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை 10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான சொகுசு பஸ் முன்னோக்கி நகர்ந்தமையால் பாதை ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் வான் மீது மோதியது. இந்த விபத்தில் இருபது பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொருத்தமற்ற அபிவிருத்தி

வவுனியா மாவட்டத்தில் பெருமெடுப்பில் சீனித் தொழிற்சாலை ஒன்றை அமைத்து அதற்கான கரும்பு உற்பத்தியை மேற்கொள்வது என்று இந்த ஆட்சி தீர்மானித்திருக்கின்றது. சீனித் தொழிற்சாலைக்காக சுமார் 500 ஏக்கர் நிலத்தையும் கரும்புச் செய்கைக்காக 72 ஆமிரம் ஏக்கர் நிலத்தையும் வழங்கவும் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டால், போர் முடிந்த பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்படக்கூடிய பெரும் அபிவிருத்தித் திட்டமாக இது அமைவதற்கான வாய்ப்பு உண்டு. ஆனால் அமைவிடப் பொருத்தமற்ற ஒரு திட்டமாக இது இருப்பதே இங்குள்ளபிரச்சினை. கரும்புச்செய்கைக்கு ஏற்ற நீர்வளம் உள்ள பல பகுதிகளை விட்டுவிட்டு, தண்ணீர்ப் பற்றாக்குறையால் தத்தளிக்கும், மழையை நம்பிப் பயிர் செய்யும் பூமியான வடக்கில் இந்தத் திட்டத்தை அமைப்பதுதான் பொருத்தமற்ற தெரிவாக இருக்கின்றது.

இந்தத் திட்டத்திற்கான அரசியல் எதிர்ப்பு ஏற்கனவே கிளம்பிவிட்டது. வடக்கின் நீர்வளத்திற்குப் பொருத்தமற்ற திட்டம் என்ற அடிப்படையிலேயே இந்தத் திட்டத்தை எதிர்க்கிறார்கள். மண்ணையும் மக்களையும் நேசிக்கும் வடக்கில் வாழும் எவரும் இந்தத் திட்டத்தை ஆதரிக்கவேகூடாது என்று வடக்கு மாகாண சபை விவசாயத்துறை முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் காட்டமாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அவர் ஒரு சுற்றுச்சூழலியலாளர். கரும்பின் நீர்த் தேவை குறித்த அறிவும் ஞானமும் உள்ளவர். வடக்கில் கரும்புச் செய்கை பொருத்தமானதா என்பது குறித்து அவர் பதவியில் இருந்தபோதே ஒரு திடமான கொள்கையைக் கொண்டிருந்தவர். சில புலம்பெயர்வாழ் முதலீட்டாளர்கள் வவுனியாவில் கரும்புச் செய்கையை சில நூறு ஏக்கர்களில் மேற்கொள்வதற்கான திட்டத்துடன் வந்தபோதே அவற்றை நிராகரித்து, இதுபோன்ற திட்டங்கள் வடக்குக்குப் பொருத்தமற்றவை என்று நிறுத்தியவர்.

இதனை ஏன் இங்கு சுட்டிக்காட்டவேண்டியிருக்கிறது என்றால், இந்தத் திட்டம் ஆட்சியாளர்களால் கொண்டு வரப்படுகின்றது என்பதற்காக அவர் எதிர்க்கவில்லை, வடக்கின் நீர் வளத்தைக் கருத்தில் கொண்டே எதிர்க்கப் படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே.

வடக்கு ஒரு வறண்ட பூமி. இங்கு இயற்கையான ஆறுகளோ, பெரும் நீர் ஏரிகளோ இல்லை. மழை மற்றும் மழை வெள்ளம் ஒடும் ஆறுகள் மட்டுமே இங்குள்ளன. ஆகக் கூடுதலாகக் குளங்களை நம்பிய பயிர்ச்செய்கை மட்டுமே இங்குள்ளது. இந்தக் குளங்களில் தேக்கப்படும் தண்ணீர்கூட மானாவாரி நிலத்தில் மூன்றிலொரு பங்கிற்கு மட்டுமே விநியோகிக்கப் போதுமானதாக இருக்கின்றது. இத்தகைய நிலையில் நெல்லைவிட பல மடங்கு தண்ணீர் தேவைப்படும் கரும்பை உற்பத்தி செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சி வடக்கின் ஏனைய பயிர்ச்செய்கையை குறிப்பாக நெற்செய்கையை முற்றிலுமாகப் பாதிப்பதாக அமைந்து விடும்.

அண்மையில் கிளிநொச்சிக்கு வந்திருந்த அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கை நாட்டின் நெற்களஞ்சியமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். இப்போது அதற்கு நேர்மாறாக வடக்கில் கரும்புப் பயிர்ச் செய்கைக்கே அதிகளவு – கிட்டத்தட்ட உதிரியாக இருக்கும் நிலங்கள் அனைத்தையும் – நிலம் ஒதுக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இருக்கும் நீர் அனைத்தையும் கரும்புக்கே உறிஞ்சியதற்குப் பின்னர், வடக்கை எப்படி நாட்டின் நெற்களஞ்சியமாக்க முடியும்?

வடக்கில் கரும்புக்குப் போதிய தண்ணீர் இல்லாத நிலையில், மகாவலியை திசை திருப்பி வடக்குக்குக் கொண்டு வரக்கூடும். அதன்மூலம்மகாவலிஅபிவிருத்திசபைவடக்கில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளும் என்கிற அச்சம் தமிழர்களுக்கு நீண்டகாலமாகவே உண்டு. அனுராதபுரத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி விட்டு, அவற்றை இப்போது வவுனியா வடக்குடன் இணைப்பதற்கு வழியேற்படுத்துவதைப் போன்றே மாகாவலியை உள்ளே விட்டாலும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டு தமிழரின் இனப்பரம்பல் விகிதாசாரம் மாற்றியமைக்கப்படும் என்ற நியாயமான அச்சம் நிலவுகின்றது.

இவ்வாறு அரசியல் ரீதியாகவும் வளப் பங்கீடு ரீதியாகவும் பேராபத்தைக் கொண்டிருக்கக்கூடிய அபிவிருத்தித் திட்டம் ஒன்றைதமிழர்கள் மீது திணிப்பதன் மூலம் ஆட்சியாளர்கள் சாதிக்க முயல்வது என்ன என்ற கேள்வி எழுகின்றது? இந்த அபிவிருத்தி வடக்குக்கு பொருத்தமற்றதொரு தெரிவு என்பதாலேயே அதற்கு எதிர்ப்பும் எழுகின்றது.



# பேராறுகள் பாயாத வடக்கிற்கு சீனித் தொழிற்சாலை பேராபத்து

ந.லோகதயாளன்

> சீனித் தொழிற்சாலையினையே வடக்கில் அமைக்க முனைகின்றனர். இத் தொழிற்சாலையை ஆரம்பித்துவிட்டு நீர் இல்லை என மகாவலியை இங்கு திருப்புவார்கள். அதன் மூலம் நிலத்தையும் பறிகொடுக்க எமது சில அரசியல் வாதிகளே துணை போகின்றமை தமது தாயையும் தாரத்தையும் விற்றுப் பிழைப்பதற்கு ஒப்பானது. மண்ணையும் மக்களையும் நேசிக்கும் எவரும் இத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவேகூடாது.

வவுனியாவில்சீனித்தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படப்போவதும் அதற்காகக் கரும்புச் செய்கையில் ஈடுபட 72 ஆயிரம் ஏக்கர் நிலத்தை தயார்ப்படுத்தஆட்சியாளர்களெடுத்துள்ள முடிவுதான் இப்போது சர்ச்சையாக எழுந்துள்ள விவகாரம்.

வவுனியாவில் கரும்புச் செய்கை மேற்கொள்ளும்அளவிற்குப் போதிய நீர்வளம் உண்டா என்பதே இதில் உள்ள முக்கிய பிரச்சனை.

கரும்புச்செய்கைக்காகவவுனியா மாவட்டத்தில் மொத்தம் 30 ஆயிரம் கெக்டேயர் நிலம் வழங்குவதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரத்னை தேசிய முதலீட்டுச் சபையின் சார்பில் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அமைச்சரவைக்கு நேரடியாகச் சமர்ப்பித்தார்.

இதிலே தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட சீனி உற்பத்தித்தொழிற்சாலையான சூடெக் (sutech) வவுனியா மாவட்டத்தின் வவுனியாவடக்குபிரதேச செயலாளர் பிரிவின் நயினாமடுவில் 492 ஏக்கர் அல்லது 200 கெக்டேயர் நிலப்பரப்பில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்தத்தொழிற்சாலை மூலம் சீனியை உற்பத்தி செய்யத் தேவையான கரும்புச் செய்கைக்கு 30 ஆயிரம் கெக்டேயர் நிலம் வழங்கவுமே அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலையின் தேவைக்காகக் கரும்பு செய்கை பண்ணுவதற்கு வவுனியா மாவட்டத்தின் சகல பிரதேசங்களில் இருந்தும் நிலம் வழங்கப்படுவதோடு அயல் மாவட்டங்களிலும் உள்ளூர் உற்பத்தியாளர்களிற்கு என்னும் பெயரில் நிலம் வழங்கப்படவேண்டியிருக்கும். அதுவும் அமைச்சரவைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதற்கமைய வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர்பிரிவிலும்செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுமே அதிக நிலங்கள் இந்தத் திட்டத்திற்காக வழங்கப்படவுள்ளதோடு அயல்மாவட்டமான முல்லைத்தீவிலும் குறிப்பிட்டளவு நிலம் இதற்குள் உள்வாங்கப்படவுள்ளது.

### அதிக நீரை உறிஞ்சும் கரும்பு

விவசாயத்தில் கரும்புச் செய்கை என்பது 18 மாத பயிர். அத்தோடு அதிகளவு தண்ணீரும் அதற்கு வேண்டும்.

வவுனியா உள்ளிட்ட பிரதேசத்தில் தற்போது செய்கைபண்ணப்படும்நெற் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 450 மில்லி மீற்றர் தொடக்கம் 700 மில்லி மீற்றர் நீர் தேவைப்படும். இதுவே வெங்காயச் செய்கையெனில் 350 தொடக்கம் 550 மி.மீற்றர் வரையான நீர் தேவைப்படும். உருளைக் கிழங்கு செய்கையெனில் 500 தொடக்கம் 700 மில்லி மீற்றர் நீர் தேவைப்படும். அதுவே கரும்பு செய்கைக்காக இருந்தால் ஏக்கருக்கு 1800 முதல் 2200 மில்லி மீற்றர் நீர் வேண்டும்.

அந்தளவு நீரைப் பெறும் அளவிற்கு வவுனியாமாவட்டம்பெரும் குளங்களையோ ஆறுகளையோ கொண்டதல்ல. அங்கே ஏற்கனவே குடிதண்ணீர்ப் பிரச்சினை தலைவிரித்தாடுகின்றது. கரும்புச் செய்கைக்காக வவுனியாவின் நிலத்தடி நீரை உறிஞ்சுவதாக இருந்தால் சில ஆண்டுகளிலேயே அந்த மாவட்டம் முழுவதும் பாலைவனமாகிவிடும்.

வடக்கு மாகாண சபை பதவியில் இருந்தபோது இதுபோன்ற அதிக நீர்வளம் தேவைப்படும் கரும்புப் பயிர்ச் செய்கையை அனுமதிக்க மறுத்திருந்தது. மாகாண சபையின் விவசாய அமைச்சராகப் பதவி வகித்த. சுற்றுச்சூழலியலாளர்பொ.ஐங்கரநேசன் இதுபோன்ற திட்டங்கள் வடக்கு மாகாணத்தின் நில மற்றும் நீர் வளத்திற்குப் பொருத்தமானதல்ல என்று நிராகரித்திருந்தார்.

"பேராறுகள் பாயாதவடக்கிற்குஇந்த சீனித் தொழிற்சாலைபேராபத்தையே தரும்" என்றார் அவர் சீற்றத்துடன்.

இன்று உலகில் சகல அபிவிருத்தியும் நீர்ச் சுவடை வைத்தே திட்டமிடப்படுகின்றது.

இங்கேஒரு கிலோ கிராம் கரும்பை உற்பத்தி செய்ய 210 லீற்றர் நீரும் ஒரு கிலோ சீனியை உற்பத்தி செய்ய ஆயிரத்து 780 லீற்றர் நீரும் தேவை என கணக்கிடப்படுகின்றது. இதுவே கரும்புச் செய்கைக்கான நீர்ச் சுவடையின் குறிகாட்டியாகும்.

இன்று வளர்முக நாடுகள் தமது மண்ணைப் பாதுகாக்கும் நோக்கில் பிற நாட்டில் வேலை வாய்ப்பு என்னும் போர்வையில் இந்த வகையான தொழிற்சாலைகளை நகர்த்துகின்றன. இதுபோன்ற கரும்பு உற்பத்திகள் உணவுத் தானிய உற்பத்தியை பாதிக்கும் என்பதனை அவர்கள் உணர்ந்துள்ளமைமட்டுமன்றி. அனுபவத்திலும் கண்டுள்ளனர்.

வடக்கில் கரும்பு பயிரிடப்படுவதாக இருந்தால் இங்குள்ள சிறு குளங்களை நம்பியே அதைச் செய்ய வேண்டியிருக்கும். அது ஏனைய விவசாயங்களுக்கு நீர் அற்றநிலையை ஏற்படுத்தும்.

சீனியின் பயன்பாட்டை குறையுங்கள் என விளம்பரம் செய்துகொண்டு பெரும் சீனித்தொழிற்சாலையினையே வடக்கில் அமைக்க முனைகின்றனர். இத்தொழிற்சாலையை ஆரம்பித்துவிட்டு நீர் இல்லை என மகாவலியை இங்கு திருப்புவார்கள்.

அதன் மூலம் நிலத்தையும் பறிகொடுக்க எமது சில அரசியல்வாதிகளே துணைபோகின்றமை தமது தாயையும் தாரத்தையும் விற்றுப் பிழைப்பதற்கு ஒப்பானது.

மண்ணையும் மக்களையும் நேசிக்கும் எவரும் இத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவேகூடாது. நாம் வெறுமனே அபிவிருத்தியை எதிர்ப்பவர்கள் அல்லர். மாறாக தமது வயிற்றுப் பிளைப்பிற்காகஎமதுமக்களையும்மண்ணையும் விற்றுப் பிழைக்கமுனையும் போலித் தேசியவாதிகளை இனம்காட்ட வேண்டும் - என்று ஐங்கரநேசன் மேலும் தெரிவித்தார்.

### அரசியல் எதிர்ப்பு

எப்படியிருந்தாலும் இந்தத் திட்டத்தை தமிழ் அரசுக் கட்சி முற்றாக எதிர்க்கும் என்று தெரிவித்தார் அக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

தமிழ் அரசுக் கட்சி இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. எமது பகுதிக்குப் பொருத்தமில்லாத இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கு நாம் பகிரங்கமாகவே எமது கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம்.

ஏனெனில் 30 ஆயிரம் கெக்டேயர் அல்லது 72 ஆயிரம் ஏக்கர் நிலத்தை நீர் வளம் இல்லாத வடக்கில் நீரை தினம் உறிஞ்சும் கரும்புச்செய்கைக்கு வழங்குவதுஒருபோதும்ஏற்றுக்கொள்ள முடியாதது. இதனால் அந்த மாவட்டமே பாலைவனமாக மாறும் அபாயமும் உள்ளது.

இந்த நிலத்தை வழங்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நேரடியாக ஈடுபட்டிருக்கிறார் என்பதை அறிய முடிகின்றது. ஆனால் அது பற்றி அவர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. கடந்த சில மாதங்களில்எம்மைப்பலதடவைகள்ஜனாதிபதி சந்தித்தபோதும் இது தொடர்பில் எந்தத் தகவலும் தெரிவிக்காதமை இந்தத் திட்டத்தின் உண்மையான உள்நோக்கம் குறித்து எமக்கு மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இவற்றின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை நாம் முற்றாக எதிர்ப்போம் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

### விவசாயிகளும் எதிர்ப்பு

அரசியல்வாதிகள் மட்டுமல்ல விவசாயிகளும் இந்தத் திட்டத்தை எதிர்க்கிறார்கள். தற்போது நெற் செய்கைக்கும்தென்னைச்செய்கைக்குமே போதிய நீர் கிடையாது என்பதோடு இவற்றை யானைகளிடம் இருந்து பாதுகாப்பதே பெரும்பாடாக உள்ளது. இதற்கு மத்தியில் இங்கே பல ஆயிரம் ஏக்கர் கரும்புச் செய்கை என்பது தண்ணீர்ப்பிரச்சினையைமட்டுமல்லாது யானைகளின் தொல்லையையும் அதிகரிக்கும். கரும்பு யானைகளுக்கு விருப்பமானஉணவு.எனவேவவுனியா முல்லைத்தீவுமாவட்டங்களில்கரும்புச் செய்கைஎன்பது யானைகளை வலிந்து அழைக்கும்நடவடிக்கையாகஅமையும். அதாவதுவேலியில்போகும்ஓணானை மடியில் விட்ட கதையாகவே இருக்கும்.

கரும்பு விளைந்து அறுவடை நெருங்கும்போது யானைகள் வந்து அவற்றை தின்றே அழித்துவிடும். விவசாயிகள் அல்லது இதற்காக முதலீடு செய்தவர்கள் தற்கொலை செய்யும் நிலைதான் ஏற்படும் என்கிறார் நெடுங்கேணி விவசாயிகள் சங்கத் தலைவரான பூபாலசிங்கம் இந்த விடயத்தில் கட்சி அரசியலிற்கு அப்பால் அப்பகுதியின் இருப்பும் அங்கே வாழும் மக்களின் இயற்கை வாழ்வுமே மிக முக்கியமானது. கரும்புச்செய்கைக்காக பெருமளவு நிலத்தை சினாவிற்கு வழங்கினாலும் சரி. சீயன்னாவிற்கு வழங்கினாலும் சரி. அப்பிரதேசத்தின் இயற்கைச்சமநிலை கண்டிப்பாக பாதிப்படைந்தே தீரும்.

சீனித் தொழிற்சாலை என்பது 3 ஆண்டு அல்லது ஐந்து ஆண்டு திட்டமாக அமைய மாட்டாது. பல ஆயிரம் மில்லியன் முதலிடப்படவுள்ள ஒரு தொழிற்சாலை குறைந்தபட்சம் 50 ஆண்டுகளாவது இயங்குவதற்குத்தான் முயற்சிக்கும். அவ்வளவு நீண்ட காலத்திற்கு கரும்புச் செய்கைக்கான தண்ணீரைப் பெறுவது வடக்கில் சாத்தியமில்லை என்கிறார் செட்டிகுளத்தைச் சேர்ந்தவரான நயினார் செல்லக்கண்டு. ஒட்டுமொத்தத்தில் இந்தத் திட்டம் பல சர்ச்சைகளையும் போராட்டங்களையும் உருவாக்குவதற்கான ஏதுநிலையோடு தொடங்கியுள்ளது. விரைவில் வடக்கு பற்றிக்கொண்டு எரிய இது வழி வகுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கொலைகார அரசியல் கட்சி தலைவர் ஆட்சிக்கு வந்தால் மக்களைக் கொன்று தன் அதிகாரத்தைக் காப்பாற்றுவார்

## பிரசன்ன ரணதுங்க சாட்டை





ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் கிராம மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பொறிமுறை மிகவும் பலமானது எனவும் அதனை உடைக்க எவராலும் முடியாது எனவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்வரும் எந்தவொரு தேர்தலிலும் கட்சியால் நியமிக்கப்படும் தலைவருக்கு ஆதரவளித்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தயாராக இருப்பதாக அமைச்சர் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களனி தேர்தல் தொகுதிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு -

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை மீண்டும் பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளோம்.

இந்த நாள்களில், சில அரசியல் கட்சிகள் விலைவாசி குறையாததை முன்னிலைப்படுத்த முயற்சிக்கின்றன. 2015 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்ட போது, மேல் மாகாண சபையின் முதலமைச்சராக பதவி வகித்து அந்த அரசாங்கத்துக்கு எதிராக நான் வெளியே வந்து போராடினேன்.

அப்போது எங்களில் சிலரால் சரியான முடிவு எடுக்க முடியவில்லை. நான் சமுதாயத்துடன் இருப்பவன். அதனால் எனக்கு அந்த பலம் இருந்தது.

மக்களின் நடத்தைக்கேற்ப மஹிந்தராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வர முடியும் என்பது புரிந்தது. நாடு முழுவதும் சென்று மஹிந்த காற்று கூட்டங்களை நடத்தி அந்த சித்தாந்தத்தை வலுப்படுத்தினோம்.

நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அரசியலை ஆரம்பித்தவர்கள். ஆனால் அப்போது எங்களிடம் அரசியல் செய்வதற்கு கட்சி எதுவும் இருக்கவில்லை.

ஐந்து மடங்கு சக்திகளை சேகரித்து மொட்டை உருவாக்கினோம். முதலில், ஒவ்வொரு கிராம சேவைப் பிரிவில் இருந்து 20 உறுப்பினர்களை ஒன்று திரட்டித்தான் இந்தக் கட்சி உருவாக்கப்பட்டது. எனவே, அதை யாராலும் உடைக்க முடியாது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் கோட்டாபய ராஜபக்ஷவை நியமித்தோம்.

அவர் நேர்மையான மனிதர். கொவிட்-19 காரணமாக, ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரமும் சரிந்தது. அதனை இலங்கையிலும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

கொவிட் 19 காரணமாக, நம்மை விட அபிவிருத்தி அடைந்த நாடுகளில், மக்கள் தங்கள் நாட்டில் வீதிகளில் இறங்கத் தொடங்கியபோது, நாங்கள் மக்களைப் பற்றி நினைத்தோம்.

மக்களின் உயிரைக் காப்பாற்ற நாட்டை மூட முயன்றனர். நாசகாரர்கள் நாட்டை மூட வேண்டாம் என்றார்கள். ஆனால் நாட்டு மக்களுக்கு மூன்று தடுப்பூசிகளும் போடப்பட்டன. பொருளாதாரம் சரிந்தாலும் மக்களின் உயிரைக் காப்பாற்ற முடிந்தது.

கொவிட்-19 தொற்றுநோயிலிருந்து நாட்டைக் காப்பாற்றிய பிறகு, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற அவர்கள் உழைத்தனர்.

பின்னர் போராட்டம் தொடங்கியது. மின்சாரம், எரிபொருள், எரிவாயு இல்லாமல், எரிவாயு சிலிண்டர்கள் வெடித்து, மக்கள் இறந்தபோது, வரிசைகள் அதிகரித்தபோது, மக்கள் தங்கள் போராட்டத்தைத் தொடங்கினர்.

அந்த நேரத்தில் நாட்டு மக்கள், அமைப்பு மாற்றத்தைக் கோரினர். அரசாங்கம் 2019 இல் ஆட்சிக்கு வந்தது மட்டுமே 2020 கொவிட் நெருக்கடி ஏற்பட்டது.

இதனால் அந்த உறவு சிறிது சிறிதாக குறைந்தது. போராட்டத்தால் நமது தலைவர்கள் தங்கள் பதவிகளை இழந்தனர்.

பயத்துக்காக அல்ல. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்பட்டது போன்று போராட்டத்தின் போது செயற்பட்டிருந்தால் நாடு பாரியளவிலான உயிர்களை இழந்திருக்கும். ஆனால், நாட்டைப் பற்றி நினைத்து, நாட்டு மக்களைக் காப்பாற்றிய தலைவர் தனது பதவியை விட்டுவிட்டார். ஒரு கட்சியாக நாங்கள் சில அடக்குமுறைகளை அனுபவித்தோம். நாங்கள் எதிர்பாராத விடயங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது.

மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எங்களையும் எங்கள் கட்சி உறுப்பினர்களையும் துன்புறுத்தினார்கள். இந்தப் போராட்டத்தால் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரது வீடுகளுக்கும் தீ வைத்தனர். எனது வீடு 77 இலும் எரிக்கப்பட்டது.

இம்முறையும் தீ வைக்கப்பட்டது. அந்த மொட்டை அழிப்பதன் மூலம் கம்பஹா மாவட்டத்தின் அரசியல் பலம் அழிக்கப்படும். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிந்தது எதற்கு? கொவிட் தொற்றுநோய்களின் போது கிராம மக்களுக்கு உணவு வழங்கியதும், பொருள்களை விநியோகித்ததும் இவர்கள்தான்.

வீடுகளுக்கு தீ வைத்தது சாதாரண மக்கள் அல்ல. உருப்படாதவர்கள் சில அமைப்புகளுடன் இணைந்து இந்த வேலையைச் செய்தனர். அவர்கள் இன்று எங்கே? நாங்கள் வெளியே இறங்கி வேலை செய்கிறோம். எங்களுக்கு அடித்தவர்கள், எங்கள் வீடுகளுக்கு தீ வைத்தவர்கள் ஒளிந்திருக்கிறார்கள். யானைக்கு ஒரு காலம் வந்தால், பூனைக்கும் ஒரு காலம் வரும் என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள்.

நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் அரசியல் செய்தவர்கள் அல்லர். அவருக்கு எதிராக அரசியல் செய்தவர்கள் நாங்கள். நாட்டில் அமைதியும், சட்டமும் ஸ்திரமற்ற நிலையில் இருக்கும் போது சட்டம் ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய தலைவரைத் தேடிக்கொண்டிருந்தோம். அரசு இயந்திரத்தை பராமரிக்கக்கூடிய தலைவரைத் தேடிக்கொண்டிருந்தோம். சவால்களை எதிர்கொள்ளும் தலைவரைத் தேடிக்கொண்டிருந்தோம். அதனால் தான் விரும்பாவிட்டாலும் நாட்டைப் பற்றி சிந்தித்து ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க முடிவு செய்தோம். ஓராண்டுக்கு முன்பிருந்த நாட்டின் நிலையையும், இன்றைய நாட்டின் நிலையையும் பார்க்கும்போது, நாம் எடுத்த முடிவு சரியானது என்று மகிழ்ச்சியடையலாம். எதிர்காலத்தில் எந்த தேர்தலுக்கும் தயாராக இருக்கிறோம்.

மக்கள் விடுதலை முன்னணி ஏராளமான மனித உயிர்களை அழித்த கட்சி. 87/88 மக்கள் விடுதலை முன்னணி பிக்குமார்களையும் அதிபர்களையும் கொன்ற கட்சி. சமீப நாள்களாக மக்கள் விடுதலை முன்னணிக்கு கூட்டம் இல்லை. லபகுமார இந்த நாள்களில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அனுரகுமாரவுக்கு டீல் குமார் என்று சும்மா கூறவில்லை. அவர் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கும் உதவினார். நாங்கள் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால்,

போருக்குப் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்பிய மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கும் செயற்பட்டார்கள். அநுரகுமாரவின் மகன் மிஹின் லங்காவில் பணியாற்றியவர். மிஹின் லங்கா நிறுவனம் மூடப்பட்ட போது அநுரகுமார தனது பிள்ளையை எயார் லங்காவில் வைப்பதற்காக மஹிந்தவுடன் ஒப்பந்தம் செய்தார். அப்படியானால் அநுரகுமார எப்படி புதிய அரசியல் கலாசாரம் பற்றி ஒப்பந்தம் இல்லாமல் பேசுகிறார்? ஒரு கொலைகார அரசியல் கட்சியின் தலைவர் ஆட்சிக்கு வந்தால், தனது அதிகாரத்தை காப்பாற்ற 88/89 காலத்தை விட அதிகமான மக்களைக் கொன்றுவிடுவார்.

போராட்டம் தவறான திசையில் சென்றபோது, அமைதியை மதிக்கும் மக்கள் வெளியேறினர். இறுதியாக இந்தப் போராட்டம் விபச்சாரிகளாலும், பாதாள உலகத்தினராலும், போதைக்கு அடிமையானவர்களாலும் கைப்பற்றப்பட்டது. யார்? காலி முகத்திடல் கூடாரங்களில் இருந்தார்கள். அங்கிருந்தவர்களுக்கு இப்போது சமூக நோய்கள்.

சென்றவர்கள் கவனமாக இருங்கள். லக் அம்மா பற்றி பேசியவர்கள் எங்கிருந்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அவர்கள் செய்தது மக்களுக்கு தெரியும். வெளிநாடுகளுக்கு சுற்றுலா செய்யும் குமாரர்களுக்கு யார் செலவு செய்கிறார்கள்? வெளிநாடுகளில் உள்ளவர்களை இலங்கைக்கு பணம் அனுப்ப வேண்டாம் என்று கூறி அந்த சதிகாரர்கள் நாட்டின் பொருளாதாரத்தை அழித்தார்கள்.

யார் அமைப்புகளை உருவாக்கினாலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கிராமத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புக்கள் இன்றும் பலமாகவே இருக்கின்றன. அதை உடைக்க முடியாது. எனவே எதிர்வரும் எந்தத் தேர்தலிலும் மொட்டினால் பரிந்துரைக்கப்படும் தலைவருக்கு ஆதரவு வழங்கி தேசத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த பலம் கொடுப்போம்.

இந்தக் கலந்துரையாடலில் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரன, மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர உள்ளிட்டோர் கலந்துகொண்டனர் (05)

# கூண்டிற்குள் அடைக்கப்பட்ட யானையை கிரேன் மூலம் தூக்குவதற்கான பயிற்சிகள்

## ஒரு வாரத்தில் தாய்லாந்து செல்கின்றது சக்சுரின்

இலங்கையில் நோய்வாய்ப்பட்டுள்ள சக்சுரின் யானையை இன்னமும் ஒருவார காலப்பகுதிக்குள் தாய்லாந்திற்கு கொண்டு செல்லவுள்ளதாக தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானத்தில் கூண்டினில் பயணிப்பதற்காக சக்சுரினை பழக்கும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக இடம்பெறுகின்றன. யானை தாய்லாந்தை சேர்ந்த பாகன்களுடன் நல்லவிதத்தில் நடந்துகொள்கின்றது என தாய்லாந்தின் தேசிய பூங்காக்கள் வனவிலங்கு தாவர பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளா நாயகம் தெரிவித்துள்ளார்.

இரவில் கூண்டிற்குள் செல்வதற்கும் வெளியே வருவதற்கும் கூண்டின் கதவுகள் மூடப்பட்ட நிலையில் காலின் கதவுகள் பிணைக்கப்பட்டு இரண்டு மணித்தியாலங்கள் உள்ளே நிற்பதற்கும் முத்துராஜவிற்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த கட்டமாக யானை உள்ளே இருக்கும் போது கூண்டை மூடி அதனை கிரேனை பயன்படுத்தி தூக்கும் பயிற்சி இடம்பெறும் என தெரிவித்துள்ள அவர் இந்த பயிற்சியை அதிகாரிகள் மிகவும் அவதானமாக முன்னெடுக்கவேண்டும் இந்த பயிற்சி இரண்டாம் திகதி யானை தாய்லாந்துக்குக் கொண்டுசெல்லப்படும் வரை இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

முதலாம் திகதி முத்துராஜவை தெகிவளை மிருகக்காட்சிசாலையிலிருந்து கொழும்பு விமான நிலையத்திற்கு கொண்டு செல்வார்கள் மறுநாள் காலை 7.30 மணிக்கு தாய்லாந்திலிருந்து விமானம் கொழும்பை வந்தடையும்.

பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு ஜூலை 2 ஆம் திகதி தாய்லாந்தின் சியாங்மாய் விமானநிலையத்தில் யானைப்பாகன்களும் மிருகவைத்தியர்களும் காத்திருப்பார்கள் அவர்கள் யானையின் நிலையை ஆராய்வார்கள்.

யானை நல்லநிலையில் காணப்பட்டால் அதனை நேரடியாக அன்றைய தினமே லம்பாங்கில் உள்ள பராமரிப்பு நிலையத்திற்கு கொண்டுசெல்வார்கள் ஆறுமணித்தியால விமானநிலையம் அதனை அழுத்தத்திற்கு உள்ளாக்கியிருந்தால் ஓய்விற்காக சியாங் மாய் சபாரிக்கு அனுப்புவார்கள். (05)

# இலங்கையிலிருந்து சீனாவுக்கு குரங்குகள் ஏற்றுமதி இல்லை

## வன ஜீவராசிகள் திணைக்களம் உறுதி

இலங்கையிலிருந்து சீனாவுக்கு குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படமாட்டாதென வன ஜீவராசிகள் திணைக்களத்தின் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை இரத்துச்செய்யுமாறு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குழு தாக்கல் செய்த ரிட் மனு திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தபோது, வனஜீவராசிகள் திணைக் களம் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மனோகர ஜயசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை வனவிலங்கு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கம் உள்ளிட்ட 27 பிரிவினரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே இவ்வாறு உறுதியளிக்கப்பட்டது. (05)

# இந்தியா, பாகிஸ்தான் மாத்திரமல்ல பங்களாதேஷுடனும் வர்த்தக உறவுகளை இலங்கை வைத்திருக்க வேண்டும்

## நிமல் சிறிபால டி சில்வா திட்டம்



இந்தியா, பாகிஸ்தான் மாத்திரமல்ல பங்களாதேஷுடனும் நாம் வர்த்தக உறவுகளை வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

சில நிபந்தனைகள் அடிப்படையில், கொழும்பு துறைமுகத்தில் குறித்தவொரு இடத்தை பங்களாதேஷுக்கு வழங்குவதற்கு தான் இணங்கியுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலை இடமாற்றம் செய்ய வேண்டாம் என ஜனாதிபதியிடம் கூறினேன்.

அநேகமான அரசியல்வாதிகள் சிங்கள பௌத்தர் ஒருவரை பரிந்துரைத்தபோதும், நான் அவ்வாறு கூறவில்லை.

நாம் ஒருவரையொருவர் மதித்து அவர்களின் திறமைகளுக்கு இடமளிக்கும் போது உண்மையான நல்லிணக்கம் வரும். பங்களாதேஷில் உள்ள, சித்தகொங் துறைமுகம் எதிர்காலத்தில் மிகவும் வளர்ந்த துறைமுகமாக மாறும். நாங்கள் முஸ்லிம் நாடுகளுடன் நாம் சிறந்த நல்லுறவைக் கொண்டிருப்பதைக் காணலாம். எனினும், சில காலத்திற்கு முன்பு நாம் முஸ்லிம் நாடுகளுடனான உறவுகளை முறையாக மேற்கொள்ளாமல் முறித்துக்கொண்டுள்ளோம் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட வேண்டும்.

ஆனால் இப்போது நாம் அந்த இணைப்புகளை உருவாக்குகிறோம். இது நமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாத ஒரு விடயமாக மாறும் என பதுளையில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது மேற்படி தெரிவித்திருந்தார். (05)

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை தக்கவைக்க தொடர்ந்தும் ஆதரவு!

## ருமேனியா உறுதி

இலங்கையின் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு ஜிஎஸ்பி. பிளஸ் வரி சலுகையை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்கு முழுமையான ஆதரவளிக்கப்படும் என்று ருமேனியா தெரிவித்துள்ளது.

இருதரப்பு ஒத்துழைப்புக்கள், பொருளாதார ஒத்துழைப்புக்கள், முதலீடுகள் மற்றும் வேலை வாய்ப்புக்கள் தொடர்பில் அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும், ருமேனிய வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ட்ரேயன் ஹிஸ்டியாவுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்விடயம் தொடர்பில் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

ருமேனிய தலைநகரான புகரேஸ்ட்டில் இலங்கை தூதரகமொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமைக்கு அந்நாட்டு வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ட்ரேயன் ஹிஸ்டியா பிரதமரிடம் நன்றி தெரிவித்துள்ளார்.

கடந்த சில வருடங்களுக்குள் பெரும்பாலான இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியமை தொடர்பில் ருமேனியா அரசாங்கத்துக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன நன்றி தெரிவித்தார். 2016 ஆம் ஆண்டு முதல் ருமேனியா இவ்வாறு அதிகளவான வேலை வாய்ப்புக்களை இலங்கையர்களுக்கு வழங்கி வருகிறது.

இதன் போது கட்டடம், ஆடைத் தொழிற்சாலை, ஹோட்டல் மற்றும் விவசாயம் உள்ளிட்ட துறைகளில் அந்நாட்டில் சுமார் 32 000 இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ருமேனியா தற்போது பல பாரிய உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்தி வருவதால், இலங்கையர்களுக்கு மேலதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கல்வி, விவசாயம், ரயில்வே, தகவல் தொழிநுட்பம் மற்றும் சுற்றுலாத்துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ளல் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு பிரதமர், ருமேனிய இராஜாங்க அமைச்சரிடம் கேட்டுக் கொண்டார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்த அவர், ஐரோப்பிய ஒன்றியத்தின் தொடர்ச்சியான ஆதரவு நாட்டுக்கு தேவை என்றும் வலியுறுத்தினார்.

இலங்கையின் ஏற்றுமதி நடவடிக்கைக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகைகளை தொடர்ந்து அமுல்படுத்த வேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கைக்கு தமது நாடு ஆதரவளிக்கும் என ருமேனிய இராஜாங்க அமைச்சர் உறுதியளித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயந்திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு அத்தியாவசிய மருந்துப்பொருள் உதவி!

இலங்கை முகங்கொடுத்திருக்கும் மருந்துப்பொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கும், அத்தியாவசிய மருந்துப்பொருள் கொள்வனவுக்கு உதவுவதற்குமென ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தால் முன்னெடுக் கப்படுவரும் நடவடிக்கைக்கு அவசியமான உதவிகளை மிச்செலின் அறக்கட்டளை வழங்கியுள்ளது. அதன்படி மிச்செலின் அறக்கட்டளையின் உதவி மூலம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப்பொருள்கள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அசூஸா குபோடா மற்றும் மிச்செலின் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி கொன்ராட் ப்ரினியோர்ஸ் ஆகியோரால் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

உரியநேரத்தில் வழங்கப்பட்டுள்ள இந்த உதவி குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, 'இந்த இக்கட்டான சூழ்நிலையில் மருந்துப்பொருள்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் வகையில் வழங்கப்பட்டுள்ள இந்த உதவிக்கு நன்றி கூறுகின்றோம்' என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கையின் சுகாதாரத்துறையை வலுப்படுத்துவதை முன்னிறுத்திய நடவடிக்கைகளை எளிதாக்குவதில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் பங்களிப்பு தொடர்பாகச் சுட்டிக்காட்டிய அந்தச் செயற்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அசூஸா குபோடா, இலங்கை மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக மிச் செலின் அறக்கட்டளை வழங்கிய உதவிகளுக்கு நன்றி கூறுகின்றோம்.

அதேவேளை எமது விரிவான உலகளாவியகொள்முதல்வலையமைப்பின் ஊடாகமருந்துப்பொருள்களைத்துரிதமாகக் கொள்வனவுசெய்யவும், விநியோகிக்கவும் முடிந்தது. - என்று குறிப்பிட்டுள்ளார். (05)

## ஹங்குரன்கெத்த பொலிஸுக்குள் பலவந்தமாக நுழைய முற்பட்டவர்களை கலைக்க வானத்தை நோக்கிச் சூடு!



ஹங்குரன்கெத்த பொலிஸ் நிலையத்துக்குள் பலவந்தமாக நுழைய முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காகபொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் சுமார் 200 க்கும் மேற்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தின் முன் கதவுகளை உடைத்து உள்ளே நுழைய முயன்றபோதே வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆண்களும் பெண்களுமாக 200 பேர் அங்கு காணப்பட்டனர் எனவும் ஆண்களில் பலர் மதுபோதையில் இருந்தனர் எனவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தக் குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எவ்வாறாயினும், சம்பவம் தொடர்பான விசாரணைகள் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அங்கு குழுமியவர்கள் இவ்வாறு நடந்து கொண்டனர் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் 8 சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்கள் அந்தப் பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (05)

## கண்டியில் ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான இரண்டு கஜமுத்துக்களுடன் நால்வர் கைது!



ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான இரண்டு கஜமுத்துக்களை விற்பனை செய்வதற்காக, கொள்வனவு செய்பவர் வரும் வரையில் கண்டி நகரில் தங்கியிருந்த நால்வர் கஜமுத்துக்களுடன் கண்டி ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி தலைமையக பொலிஸாரின் ஊழல் ஒழிப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அநுராதபுரம், அலவ்வ மற்றும் தலத்துஓயா பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் 23-33 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இரண்டு கஜமுத்துக்களும் அநுராதபுரத்தைச் சேர்ந்த சந்தேக நபருக்கு சொந்தமானது எனவும் பொலிஸார் கூறினர். (05)

## சுகாதார அமைச்சிலிருந்து 1,794 வாகனங்கள் மாயம்

### கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை

சுகாதார அமைச்சின் 1794 வாகனங்கள் காணாமல் போயுள்ள அதேநேரம் 259 வாகனங்கள் வெளிதரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனங்கள் 1950 மற்றும் 1996 இற்கு இடையில் பதிவு செய்யப்பட்டவை என பொதுக் கணக்குகள் தொடர்பான நாடளுமன்றக்குழுவின்தலைவர் இராஜாங்கஅமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

இந்தவாகனங்களில் 679 கார்கள் மற்றும் 1115 மோட்டார்சைக்கிள்கள் அடங்கும் என்றும் இந்த வாகனங்கள் தொடர்பான வருவாய் உரிமம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


1115 மோட்டார்சைக்கிள்களில் பதினொரு மோட்டார் சைக்கிள்கள் பற்றிய தகவல்கள் மட்டுமே தெரியவந்துள்ளன எனவும் அதில் பெரும்பாலான மோட்டார் சைக்கிள்கள் கள அதிகாரிகளுக்கே வழங்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், இந்த மோட்டார் சைக்கிள்கள் ஒப்பந்தத்தின் கீழ் கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்றன எனவும், அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் தனிப்பட்ட முறையில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின்மூலம் 425 வாகனங்கள் பற்றிய தகவல்களை வெளிக்கொணர முடிந்த போதிலும், அவைவிற்கப்பட்டுதுஷ்பிரயோகம் செய்யப்பட்டனவா என்பதைக் கண்டறிவது கடினமாக உள்ளதாக சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இங்கு வாகன நிர்வாக முறைமை தொடர்பில் கோபா குழுவின் தலைவர் விசாரணைகளை மேற்கொண்டதுடன், அந்த முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். வாகனங்கள் காணாமல் போவதைத்தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கு மாறு கோபா குழுத் தலைவர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## உலக பாரம்பரிய சின்னமாக மகாவம்சம் 2023இல் யுனெஸ்கோ அறிவிப்பில் வந்தது!



யுனெஸ்கோ 'மகாவம்சத்தை' உலக ஆவணப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்துள்ளது.

மகாவம்சம் என்பது இலங்கை வரலாற்று தகவல்களை உள்ளடக்கி, அதேவேளை பௌத்த மதத்தை முதன்மைப்படுத்திபௌத்தபிக்குகளினால் பாளி மொழியில் ஏட்டுச்சுவடிகளில் செய்யுள்வடிவில்காலவரிசையாககுறித்து வைக்கப்பட்டவற்றைமூலமாகக்கொண்டு, தொகுக்கப்பட்ட இலங்கையின்பழைமையான தொகுப்பு நூலாகும். இந்த நூல் கி.பி. 6 ஆம் நூற்றாண்டளவில், பாளி மொழியில், மகாநாம தேரர் எனும் பௌத்த பிக்குவால் தொகுக்கப்பட்டது.

அதன்படி,யுனெஸ்கோவினால் 2023 இல் புதிதாக அறிவிக்கப்பட்ட 64 உலக சர்வதேச ஆவண மரபுச்சின்னங்களில் மகாவம்சம் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## ஜனாதிபதியின் வீடு தீக்கிரையானமையை சமூக ஊடகங்களில் வெளியிட்டவர் கைது

2022 இல் ஜனாதிபதியின் வீடு எரிக்கப்படுவதை சமூக ஊடகங்களில் நேரலை செய்த சமூக ஊடக செயற்பாட்டாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்ட பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (05)

## காலி முகத்திடலில் உள்ள யாசகர்கள் தொடர்பாக நடவடிக்கை முன்னெடுப்பு

காலி முகத்திடலில் உள்ள யாசகர்களை அம்பாந்தோட்டையில்உள்ளசமூகசேவைகள் புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவர்களை ரிதியகமவில் உள்ள புனர்வாழ்வு நிலையத்திற்கு இடமாற்றம் செய்ய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

காலி முகத்திடலில் யாசகர்களால் பொது மக்கள் துன்புறுத்தப்படுகின்றனர் என எழுந்த முறைப்பாடுகளை அடுத்து இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் இலங்கை பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

காலி முகத்திடலில் சுமார் 150 யாசகர்கள் மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்குகின்றனர் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த யாசகர்கள் ரிதியகம மையத்தில் தங்கியிருக்கும் போது அவர்களுக்கு தேவையான தங்குமிட வசதிகள், உணவு மற்றும் பானங்களை வழங்குவதற்கான நிதியுதவியும் வழங்கப்படவுள்ளது.

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் ஊடாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பணிப்புரை விடுத்துள்ளார். (05)

## நோர்ட்டன் பாலத்தருகே மஸ்கெலியாவில் மண் சரிவு

### போக்குவரத்துக்குத் தடை



மழையுடனான காலநிலையை அடுத்து மஸ்கெலியா, நோட்டன் - தியகல பிரதான வீதியில் மண்மேடு சரிந்துள்ளமையால் குறித்தவீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இதனால் நோட்டன் - தியகல வீதியை பயன்படுத்தும் சாரதிகள் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

சரிந்து விழுந்துள்ள மண் மேடை அகற்றும் நடவடிக்கையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## கடன் அட்டைகளுக்கான வட்டிவீதங்கள் குறையும்!

ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் பல்வேறு வர்த்தக வங்கிகள் தங்களது கடன் அட்டைகளுக்கான வட்டிவீதங்களை குறைக்க தீர்மானித்துள்ளன.

இலங்கை மத்திய வங்கியால் அண்மையில் நாணயக் கொள்கை தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, வட்டி விகிதங்களைக் குறைக்கத் தீர்மானித்துள்ளதாக பல வர்த்தக வங்கிகள் அறிவித்துள்ளன.

இதேவேளை, நாட்டில் கடன் அட்டைகளின் பாவனை தொடர்பான தரவுகளை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஏப்ரல் மாதத்தில் நாட்டில் செயற்பாட்டில் கடன் அட்டைகளின் எண்ணிக்கை 1,929,984 ஆக காணப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதியில் 1,952,991 கடனட்டைகள் பயன்பாட்டில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சட்டவிரோத மண் அகழ்வை தடுத்து நிறுத்த கோரிக்கை!

## பிள்ளையான் விடுத்தார்

மகாவலி திட்டப் பகுதியில் மண் அகழ்வு உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகளை நிறுத்துமாறு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்புமாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தலைமையில் மகாவலி மற்றும் மேச்சல்தரை தொடர்பான விசேட கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டுகருத்துத்தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாகக அவர் மேலும் தெரிவிக்கையில் -



'தமிழ் மக்களுடைய காணிகளை சிங்களவர்கள் அபகரித்தமையால்நான் விடுதலைப் புலிகளில் இருந்து யுத்தம் செய்தேன். இது நான் முதல் இருந்த நிலை. பின்னர் நான் அரசியலுக்கு வந்தேன். மாவட்ட நிர்வாக அதிகாரிகள் அரசியல் நிர்வாக அதிகாரிகள் கலந்துரையாடி எதிர்காலத் திட்டம் நாங்கள் என்ன செய்ய வேண்டும் நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை யோசிக்க வேண்டும்.

இந்த மகாவலி திட்ட பகுதியில் மண் அகழ்கின்றனர். இதை யார் அகழ்கின்றார்கள்? எனவே இவ்வாறன சில விடையங்களை நிறுத்துமாறு அமைச்சருக்குத் தெரியப்படுத்த வேண்டும் - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# சமுர்த்திப் பதிவுகளில் முறைகேடுகள் இருந்தால் முதலாம் திகதிவரை மேன்முறையீடு செய்யலாம்

## யாழ்.மாவட்ட செயலர் அறிவிப்பு

யாழ் மாவட்டத்தில் சமுர்த்தி பதிவுகளில் ஏதாவது முறைகேடு இடம்பெற்றிருந்தால் அதற்கு மேன்முறையீடு செய்வதற்கு 10 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகயாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி பதிவுகளில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து திங்கட்கிழமையாழ்மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பொது மக்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இந்த விடயம் தொடர்பாக வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சமுர்த்திபதிவுகளில்முரணப்பாடுகள் இருந்தால் அனுப்பிவைக்கப்படும்மேல் முறையீடுகள் பரிசீலனை செய்யப்பட்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இது தொடர்பில் பொதுமக்கள்குழப்பமடையத் தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தால்நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல்அண்மையில் வெளிவந்திருந்த நிலையில் முதியோர்கள். விதவைகள் எனவறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படாததால் நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் இடமபெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# திருட்டு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது

யாழ். சுன்னாகம் மற்றும்தெல்லிப்பழைபொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்கள் யாழ்.காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்தசிலதினங்களுக்கு முன்னர் அளவெட்டி பகுதியில் பாடசாலை அதிபர் ஒருவரின் வீட்டினுள்புகுந்ததிருடர்கள் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் பொருள்களைத்திருடிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறைமாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவின்பொலிஸ்பரிசோதகர் நிதர்ன் தலைமையிலான பொலிஸ்குழுவினர்.நடத்திய விசாரணைகளில்அளவெட்டி பகுதியைச்சேர்ந்த 21 வயது மற்றும் 25 வயதான இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்களிடமிருந்து திருடப்பட்ட இலத்திரனியல் பொருள்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபர்கள் தெல்லிப்பழை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேலும், கைதான சந்தேகநபர்கள் சுன்னாகம் மீதெல்லிப்பழை பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல திருட்டுக்களுடன் தொடர்புபட்டுள்ளனர் எனக் கூறியுள்ள பொலிஸார். மேற்படி இரு பொலிஸ் பிரிவுகளிலும் அண்மைய நாள்களில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் பொதுமக்கள் விழிப்புடன் செயற்படுமாறும் கேட்டுள்ளனர். (05)

# உணவு தொண்டையில் சிக்கி ஒரு வயதுக் குழந்தை சாவு

பொகவந்தலாவ பகுதியில் 26 வயதுடைய தாய் ஒருவர் தனது ஒரு வயது மகளுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்த போது உணவு தொண்டையில் சிக்கி குறித்த குழந்தை உயிரிழந்துள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தாய்க்கு திடீரென ஏற்பட்ட வலிப்பு நோயால் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பொகவந்தலாவை பிரிட்வெல் தோட்டத்தைச் சேர்ந்தஆறுமுகன் அகல்யா (வயது-1)என்றகுழந்தையே இவ்வாறுஉயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாய் மதிய உணவு தயாரித்து குழந்தைக்கு ஊட்டிக் கொண்டிருக்கும் போது மேற்படி தாய்க்கு வலிப்பு நோய் ஏற்பட்டுள்ளது.



இதனால் குழந்தையின் தொண்டையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தஉணவு சிக்கி அது உயிரிழந்துள்ளதாக பொகவந்தலாவபொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த குழந்தையின் தாய் நீண்ட நாள்களாக வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்எனவும்பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உயிரிழந்த குழந்தையின் சடலம் பிரேதபரிசோதனைக்காகடிக்கோயா ஆதார வைத்தியசாலைக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி வளப் பற்றாக்குறைக்குத் தீர்வு கிட்டும்

## திலீபன் எம்.பி. உத்தரவாதம்

வவுனியா தேசிய கல்வியியல்கல்லூரியில்நிலவும் வளப்பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு காணப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் தெரிவித்துள்ளார்.

மேற்படி கல்வியியல் கல்லூரியில் காணப்படும் வளப்பற்றாக்குறை தொடர்பாக கல்லூரியின் பீடாதிபதி குணரட்ணம் கமலகுமார் தலைமையிலான குழுவினர் திலீபனுக்கு சுட்டிக்காட்டிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது. ஆசிரிய மாணவர்களின் வசதி கருதி அமைக்கப்பட்ட கட்டடங்கள் பல கட்டடத்திணைக்களத்தின் அசமந்தப்போக்கால் பல ஆண்டுகளாக நிறைவுறாது காணப்படுகின்றமை. கேட்போர் கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட தரமற்ற வேலைகள். சுற்றுமதிலின் ஒரு பகுதி அமைப்பத்தில் ஏற்படும் கால தாமதம். ஆசிரிய மாணவர் விடுதி பயன்படுத்தமுடியாமல் காணப்படுகின்றமை மற்றும் நீர்த்தாங்கி பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்றஉறுப்பினருக்குசுட்டிக் காட்டியிருந்தனர்.

இதனையடுத்து அவர் சில திணைக்கள தலைவர்களுடன் உடனடியாக தொலைபேசியில் தொடர்புகொண்டு கால தாமதமாகும் பணிகளை உடனடியாக செய்வதற்கு உத்தரவிட்டிருந்ததுடன். ஊழியர் பற்றாக்குறை மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான தொழிலார்களை நிரந்தரமாக்குவது தொடர்பான விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் வாரங்களில் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெறவுள்ள சந்திப்பில் தாம் கலந்துரையாடுவதாகவும் தெரிவித்திருந்தார். (05)

# சனத் நிஷாந்தவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஜூலை 13



நீதிமன்றத்தை அவமதித்ததாக இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராகதாக்கல்செய்யப்பட்ட முறைப்பாட்டை ஜூலை 13 ஆம் திகதி அழைக்குமாறு மேன்முறையீட்டுநீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்று (செவ்வாய்க்கிழமை) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகிய நீதிபதிகள் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது.பிரதிவாதியான இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

சாட்சியங்கள் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் இந்த வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரானபிரதி சொலிசிட்டர்ஜெனரல் லக்மினி கிரிஹாகமநீதிமன்றத்துக்கு அறிவித்தார். (05)

# சொகுசு கார் உட்பட 3 வாகனங்கள் மீது களுத்துறையில் முறிந்து வீழ்ந்தது மரம்

களுத்துறை நகர மண்டபத்துக்குப் பின்புறமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு கார் உட்பட மூன்று வாகனங்கள்மீதுபுளியமரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சொகுசு கார் மற்றும் ஓட்டோக்கள் மீது மரம் வீழ்ந்தபோது. முச்சக்கரவண்டிகளில் இருவர் மாத்திரமே இருந்ததாகவும். அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்றுவாகனங்களும் தனியார் பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர்களை ஏற்றிச் சென்றன எனக் கூறப்படுகிறது.

சொகுசு காரில் வந்தநபர் தனது பிள்ளையின் வகுப்பு முடிந்து பிள்ளையயைகாரை நோக்கிஅழைத்துவரும்போது மரம் வீழ்ந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (05)

# நிட்டம்புவ கால்நடைப் பண்ணையில் கொழும்புவாசி தாக்கப்பட்டு கொலை

நிட்டம்புவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கால்நடை பண்ணை ஒன்றில் இடம் பெற்ற தாக்குதல்சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சுமார் 42 வயதுடையவர் என வும் அவர் வசிக்கும் இடம் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். உயிரிழந்தவர் கொழும்பிலிருந்து சென்று இந்தக் கால்நடைபண்ணையில்வேலை செய்ய வந்தவர். இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரை நிட்டம்புவபொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (05)

# நாமாக முன்வந்து குருதி வழங்கப் பழக வேண்டும்

## வடமாகாண ஆளுநர் சாள்ஸ் வலியுறுத்து

மக்கள் அனைவரும் தாமாக முன்வந்து இரத்த தானம் செய்ய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற குருதி கொடையாளர்கள் கௌரவிப்புநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தானங்களிலே சிறந்த தானம் இரத்ததானம். உடல் பாகங்களை தானம்செய்வது கண் தானம் செய்வது போன்றபல்வேறுதானங்கள் தற்பொழுத நடைபெற்று வருகின்றன.

வடக்கு மாகாணத்திலே யுத்தகாலத்தில் பல்வேறுபட்ட பிரச்சனைகளை நாங்கள் எதிர்நோக்கி இருந்தோம். யுத்த காலத்தில் இரத்தம் என்பது உயிர் காக்கும் ஒரு விடயமாகக் காணப்பட்டது.

வவுனியாமாவட்டத்தில் நான் அரசாங்க அதிபராக இருந்தபோது யுத்தம் மற்றும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்ததானம் வழங்குவதில் நாங்கள் இடர்பாடுகளை எதிர்நோக்கி இருந்தோம்.

அக் காலத்தில் இரத்த தான விழிப்புணர்வை பல்வேறுபட்ட மட்டங்களில் மேற்கொண்டு இரத்த வங்கி மூலம் செயற்படுத்தி தான் பல உயிர்களைக் காப்பாற்றி இருந்தோம். எனவே இரத்த தானம் என்பது ஒரு முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது.

மருத்துவர்கள் தமது சேவையை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமாக இருந்தால் எங்களைப் போன்றவர்கள் வைத்தியர்களுக்கு உதவுவதற்கு முன் வரவேண்டும்.

அந்தவகையில் சமூகப் பொறுப்பினை தாமாகவே உணர்ந்து செயற்பட்ட இரத்த கொடையாளர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள்.

எனவே இதே போல பல குருதிக்கொடையாளர்கள் எதிர்வரும் காலத்தில் உருவாகவேண்டும்' என்று தெரிவித்துள்ளார். (05)

# இரத்தினபுரி பிரதேச சபை முன்னாள் தலைவர் உட்பட 6 பேருக்குத் தண்டனை உறுதியானது

வர்த்தக நிலையம் ஒன்றுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் இரத்தினபுரி பிரதேசசபையின் முன்னாள் தலைவர் சுசத் திஸாநாயக்க உள்ளிட்ட 6 பேருக்கு இரத்தினபுரி மேல்நீதிமன்றால் விதிக்கப்பட்ட 5 வருடக் கடூழிய சிறைத்தண்டனையை உறுதிப்படுத்தியதுடன் இது தொடர்பான மேன்முறையீட்டு மனுவையும் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவல கொலை செய்யப்பட்டபோது எழுந்த அசாதாரண நிலைமைகளில் இரத்தினபுரியில் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு 50,000 ரூபா நஷ்டத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் சட்ட மா அதிபரால் இரத்தினபுரி மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் அவர்களுக்கு 5 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மூர்து பேர்னாண்டோ, குரே ராஜா மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய நீதிபதிகள் அடங்கிய அமர்வில் பரிசீலிக்கப்பட்டது.

இதன்போதே குறித்த மனுவை நிராகரித்த நீதிமன்றம் மேல் நீதிமன்றின் தீர்ப்பை உறுதிப்படுத்தியது. (05)

# மட்டக்களப்பு ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் கிழக்கு ஆளுநர் தலைமையில்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மாதாந்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கிழக்கு மாகாண ஆளுநரும். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான செந்தில் தொண்டமான் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும்.அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன். இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்.நாடாளுமன்றஉறுப்பினர்களான இராசமாணிக்கம்சாணக்கியன்.கோவிந்தன்கருணாகரன் மற்றும்பல அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதன் போது மட்டகளப்பு மாவட்டத்தில் நிலுவையில் உள்ள அனைத்து பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டதுடன். மாவட்டத்தின்தற்போதையசுயநிலைத்தன்மையை மேம்படுத்தபுதிய வளர்ச்சித் திட்டங்களை வகுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
140-160 KM
80-85 KM
70-75 KM
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.06.2023இல் வெளியிடப்பெற்றது.